
# திராவிடத்தால் வாழ்கிறோம்

951

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# இது பெரியார் மண்

ர.பிரகாசு

26

பகுத்தறிவுக் கொள்கைகளை முழுமையாகக் கடைப்பிடிக்கும் ஊர்களைப் பற்றிய பதிவாக ஒரு தொடர்.

2020-ஆம் ஆண்டு மார்ச் 24, கொரோனா பேரிடருக்காக இந்தியாவில் பொதுமுடக்கம் அறிவிக்கப்பட்ட நாள். அதற்கு சரியாக இரண்டு வாரத்திற்கு முன்பு, காவலாண்டியூரில் மூவரை மட்டும் தனிமுடக்கம் செய்தனர், சில சாதியவாதிகள். மார்ச் 9-ஆம் தேதி இரவு, 10 மணியளவில், 6 கார்கள், 10 க்கும் மேற்பட்ட இருசக்கர வாகனங்கள் காவலாண்டியூர் ஈஸ்வரன் வீட்டின் அருகே சென்று நின்றன. மளமளவென 50-க்கும் மேற்பட்டோர் இறங்கி, ஈஸ்வரன் வீட்டுக்குள் புகுந்தனர். ஆனால், அவர்கள் தேடிச்சென்ற இருவர் அங்கே இல்லை. அன்று காலையில்தான் ஈரோடு மாவட்டம், பவானியைச் சேர்ந்த இளமதி-செல்வனுக்கு சுயமரியாதைத் திருமணம் நடத்திவைத்திருந்தார் ஈஸ்வரன்.




## சாதி வீழ்ந்தது, பெரியாரியம் வென்றது!

காதல் திருமணங்களைச் செய்து வைப்பது, நாங்கள் ஏற்றுக்கொண்டிருக்கும் சாதி ஒழிப்பு இலட்சியத்துக்கான செயல்திட்டங்களில் ஒரு வழி. ஆனால், அது மட்டுமே எங்கள் பணி அல்ல. கிராமப் பிரச்சாரங்கள் செய்கிறோம். பயிலரங்கங்கள் நடத்துகிறோம். ஊர் மக்களே அதற்கான செலவுகளை ஏற்றுக்கொள்வார்கள். தமிழ்நாடெங்கும் பொதுக்கூட்டங்களுக்கும், மாநாடுகளுக்கும் காவலாண்டியூரில் இருந்து பெரும் கூட்டத்துடன் செல்வோம். அவை தவிர, பாசிச பா.ஜ.க. ஆட்சியின் தமிழர் உரிமை பறிப்புகள், அடக்குமுறைகளுக்கு எதிரான போராட்டக் களங்களிலும் காவலாண்டியூர் தவறாமல் பங்கேற்கும்.

**- ஈஸ்வரன், தலைமைக் குழு உறுப்பினர், திராவிடர் விடுதலைக் கழகம்.**



ஈஸ்வரன்

இருவரையும் தேடித்தான், சாதிச் சங்கங்களைச் சேர்ந்த பெரும் கும்பல் ஈஸ்வரன் வீட்டைச் சூழ்ந்தது. இளமதியும், செல்வனும் கிடைக்காத ஆத்திரத்தில், ஈஸ்வரனைக் கடத்திச் சென்றனர். பின்னர், இளமதி, செல்வனின் இருப்பிடத்தை அறிந்து கொண்டு அவர்களையும் கடத்தி, எங்கோ அடைத்துவைத்தனர். அடுத்த சில மணி நேரங்களில் நூற்றுக்கணக்கான கருப்புச் சட்டைகள் கொளத்தூர் காவல் நிலையத்தை சூழ்ந்துவிட்டனர். நள்ளிரவுக்குப் பின் ஈஸ்வரனையும், செல்வனையும் மட்டும் மீட்டது காவல்துறை.

4 நாட்கள் ஆகியும் இளமதி மீட்கப்படவில்லை. அப்போது நாடாளுமன்றத்தில் இவ்விவகாரம் குறித்துப் பேசிய தருமபுரி மக்களவைத் தொகுதியின் தி.மு.கழக உறுப்பினர் டாக்டர் செந்தில், “இளமதியை உடனடியாக மீட்க வேண்டும், சுயமரியாதைத் திருமணத்தை நாடு முழுவதும் சட்டப் பூர்வமாக்க வேண்டும்” என்றும் வலியுறுத்தினார். ஈஸ்வரனும், செல்வனும் கொடுத்த புகாரின் பேரில், 18 பேர் கைது செய்யப்பட்டனர். இளமதி, நேரடியாக நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். சாதிச் சங்கங்களின் நெருக்கடி காரணமாக, அன்று செல்வனோடு செல்லவில்லை இளமதி.

வழக்கறிஞர் ப.பா.மோகன் ஒன்றரை ஆண்டுகள் சட்டப் போராட்டம் நடத்தினார். சாதிச் சங்கங்கள் கைவிரித்தன, 14.10.2021 அன்று இளமதியின் பெற்றோரே மனமுவந்து செல்வனிடம் அனுப்பி வைத்தனர். 23.10.2021 அன்று மேட்டூர் நகரில் இளமதி - செல்வன் தம்பதி ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டு, கொட்டும் மழையில், அவர்களுக்கான பாராட்டு விழாவாக, பெரியார் பிறந்த நாள் பொதுக்கூட்டத்தை நடத்தியது திராவிடர் விடுதலைக் கழகம். புரட்சியாளர் அம்பேத்கரின் பிறந்த நாளையொட்டி, 15.04.2022 அன்று கொளத்தூரிலும் பொதுக்கூட்டம் நடத்தி இளமதி, செல்வனும், அவர்களுக்கு உறுதுணையாக நின்ற ஈஸ்வரனும் பாராட்டப்பட்டனர்.

கடத்திச்சென்று அச்சுறுத்தினால், இனி சாதி மறுப்புத் திருமணங்களை ஈஸ்வரன் செய்துவைக்கமாட்டார் என்று கருதின அப்பகுதி சாதிச் சங்கங்கள். ஆனால், அதற்குப் பிறகும் நூற்றுக்கணக்கான சாதி மறுப்புத் திருமணங்களை செய்துவைத்து, தன்னை அச்சுறுத்திப் பார்த்தவர்களை அதிரச் செய்தார் ஈஸ்வரன். ஏனெனில், இளமதி-செல்வன் நிகழ்வு ஓர் உதாரணம்தான்.

**...பயணிப்போம்.**

## வாசிப்பை வளர்க்கும் நன்முயற்சி!

2024-ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றத்தின் மானியக் கோரிக்கையின்போது, சென்னையில் அனைத்து பதிப்பக நூல்களையும் ஒரே இடத்தில் விற்பனை செய்யும் வகையில், ‘புத்தகப் பூங்கா’ தொடங்கப்படும் என்ற அறிவிப்பை முதலமைச்சர் வெளியிட்டிருந்தார். அதன்படி, சென்னை சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையத்தின் கீழ்த் தளத்தில், ரூபாய் 1.85 கோடி செலவில், 5,100 சதுர அடி பரப்பளவில், 15 ஆயிரம் நூல்கள் வைக்கும் வகையில், 30 அடுக்குகளுடன் ‘சென்னை புத்தகப் பூங்கா’ 10.06.2025 அன்று திறக்கப்பட்டது.



தமிழ்நாடு பாடநூல் கழகத்தால், உலகத் தரத்தில் உருவாக்கப்பட்டுள்ள இந்த சென்னை புத்தகப் பூங்கா, வாசகர்கள், பயணிகள் என அனைவரிடமும் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. இதில் பாடநூல் நிறுவனம் உள்ளிட்ட 14 புகழ்பெற்ற பதிப்பகங்கள் தங்கள் வெளியீடுகளைக் காட்சிப்படுத்தியுள்ளன. மேலும் பல பதிப்பகங்களும் இதில் இணைந்திட ஆர்வத்துடன் உள்ளன.

இந்நிலையில் புத்தகப் பூங்காவை மேலும் அர்த்தமுள்ளதாக்கும் வகையிலும், வாசகர்களுக்குப் புதிய அனுபவத்தைத் தரும் விதமாகவும், மாதந்தோறும் நிகழ்ச்சிகள் நடத்த, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் கழகமும், தமிழ் இணையக் கல்விக் கழகமும் இணைந்து முடிவெடுத்துள்ளன. 02.09.2025 அன்று நடைபெற்ற முதல் நிகழ்ச்சியில், ‘தொன்மை மறவேல்’ என்ற தலைப்பில், மதுரை மக்களவைத் தொகுதி உறுப்பினர் சு.வெங்கடேசன் கலந்துகொண்டு உரையாற்றினார். வாசகர்கள் வாங்கிய நூல்களில் கையெழுத்திட்டும் வாழ்த்தினார்.

பரபரப்பான சென்னை மெட்ரோ ரயில் நிலையத்தில், இப்படியொரு அறிவுசார் கூடல் மாதந்தோறும் நடத்தப்படுவது வாசிப்புச் சூழலை வளர்க்கும் நன்முயற்சி என சமூக வலைதளங்களில் பலரும் பாராட்டியுள்ளனர்.

# போய்ப்பெட்டி

கோவி.லெனின்

76

``கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்...''

***தமிழ்நாடு முதலமைச்சரின் வெளிநாட்டுப் பயணங்களின் முதலீடுகள் குறித்து, வெள்ளை அறிக்கை தரவேண்டும் என்று எடப்பாடி பழனிசாமியும், பா.ஜ.க. ஆளும் மாநிலங்களின் முதல்வர்கள் அளவுக்கு, முதலீட்டை ஈர்க்கவில்லை என பா.ஜ.க. தரப்பும் குற்றம் சாட்டுகிறதே?***

ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என்ற உயர்ந்த இலக்குடன் செயல்படும் திராவிட மாடல் அரசின் முதலமைச்சரின் கடந்த நான்காண்டு கால ஆட்சியில் 10.60 இலட்சம் கோடி ரூபாய் அளவுக்கான முதலீடுகளுக்குப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளன. 35 இலட்சம் வேலை வாய்ப்புகளுக்குரிய தொழில் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. ஜெயலலிதா ஆட்சியில் ஓர் உலக முதலீட்டாளர் மாநாடு நடந்தது. 2.42 இலட்சம் கோடி ரூபாய் முதலீட்டுக்கான ஒப்பந்தங்கள் போடப்பட்டன. அந்த முதலீடுகள் குறித்த வெள்ளை அறிக்கையை ஜெயலலிதா வெளியிடவில்லை. அவருக்குப் பிறகு, முதலமைச்சரான எடப்பாடி பழனிசாமியும் வெளியிடவில்லை. பழனிசாமி தன் பங்குக்கு உலக முதலீட்டாளர் மாநாட்டை நடத்தினார். வெளிநாடுகளுக்குச் சென்று வந்தார். அந்த முதலீடுகள் குறித்த வெள்ளை அறிக்கையையும் வெளியிடவில்லை. அப்படிப்பட்டவர், திராவிட மாடல் அரசை நோக்கி, வெள்ளை அறிக்கை கேட்பது வேடிக்கை.



## இரட்டை இலக்க வளர்ச்சியே சாட்சி!

ஜெர்மனி, இங்கிலாந்து நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள முதலமைச்சர் அவர்கள் சென்னை விமான நிலையத்திலேயே தனது பயணத்தின் நோக்கத்தையும், இதற்கு முன் மேற்கொள்ளப்பட்ட பயணங்களால் தமிழ்நாட்டுக்குக் கிடைத்துள்ள முதலீடுகளையும் தெளிவாக விளக்கிவிட்டே புறப்பட்டார். தொழில்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா அவர்களும் ஒப்பந்தங்கள் எந்தளவில் முதலீடுகளாக மாறியுள்ளன என்பதையும், முதலமைச்சரின் வழிகாட்டுதலில் எந்தெந்த மாவட்டங்களில் முதலீடுகள் செய்யப்பட்டு, அந்த தொழிற்சாலைகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த எத்தனை பேர் வேலைவாய்ப்புகளைப் பெற்றிருக்கிறார்கள் என்பதையும் சட்டமன்றத்திலும் பேட்டிகளிலும் தெளிவாகத் தெரிவித்துள்ளார்.

பா.ஜ.க. ஆளும் மாநிலங்களின் முதலமைச்சர்கள் அதிக முதலீடுகளைக் கொண்டு வந்ததாக தமிழ்நாட்டின் பா.ஜ.க.வினர் குற்றம்சாட்டுவது, தமிழ்நாட்டைத் தொடர்ந்து இழிவுபடுத்தும் அவர்களின் வெறுப்புக் கொள்கையின் ஓர் அம்சம்தான். ஒன்றிய பா.ஜ.க. அரசே தன்னுடைய தொழில்துறை மற்றும் திட்ட செயலாக்கத்துறை அறிக்கைகளின் மூலம், இந்தியாவிலேயே பொருளாதார வளர்ச்சியில் சிறந்த மாநிலமாக தமிழ்நாடு இருப்பதையும், இரட்டை இலக்க பொருளாதார வளர்ச்சியை அடைந்திருப்பதையும், இந்தியாவில் அதிக தொழிற்சாலைகளைக் கொண்ட மாநிலம் தமிழ்நாடுதான் என்பதையும், இந்திய அளவில் தொழிற்சாலைகளில் கிடைக்கக்கூடிய வேலைவாய்ப்புகளில் 15 சதவிகிதம் என்ற அளவில் தமிழ்நாடு முதலிடத்தில் இருப்பதையும் தெரிவித்துள்ளது.

பா.ஜ.க. ஆளும் மாநிலங்கள் ஏன் இந்த வளர்ச்சியைப் பெறவில்லை.? அதற்கு ஒரே ஒரு உதாரணம், ஸ்விட்சர்லாந்து நாட்டின் டாவோஸ் நகரில் உலக வர்த்தகக் கண்காட்சிக்குப் போய், அங்கிருந்து வீடியோ கான்ஃபரன்சில் இந்தியாவில் உள்ள ரிலையன்ஸ் நிறுவனத்துடன் பேசி, ஒப்பந்தம் போட்டவர்தான் மராட்டிய மாநில பா.ஜ.க. முதல்வர் பட்னவிஸ். உலக நாடுகளுக்குச் சென்றாலும், உள்ளூர் முதலாளிகளை மட்டுமே வளர்ப்பது பா.ஜ.க மாடல். உலக முதலீடுகளால் உள்ளூர் மக்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கி, மாநிலத்தை வளர்ச்சியடையச் செய்வது திராவிட மாடல்.

**...வினா தொடரும்.**

## ஃப்ளாஷ்பேக்





ரா.சதீஷ் திராவிடன்

### கழகப் பணிக்கு உந்து சக்தி!

2014-ஆம் ஆண்டு, இன்றைய கழகத் தலைவர் அன்றைய இளைஞர் அணிச் செயலாளர்-கழகப் பொருளாளர் அவர்கள், கழக வளர்ச்சி நிதி திரட்ட தஞ்சாவூர் வடக்கு மாவட்டம், கும்பகோணம் மாநகருக்கு வருகை தந்திருந்தார். அப்போது சிறுவனாக அவரை நேரில் சந்தித்து, என்னால் இயன்ற நிதியை அவரிடம் வழங்கி, வாழ்த்துப் பெற்றேன். அப்போது எடுத்துக்கொண்ட புகைப்படம் இது, இன்றைக்கும் கழகப் பணியாற்ற உந்து சக்தியாக உள்ளது.

**– ரா.சதீஷ் திராவிடன்,
தகவல் தொழில்நுட்ப அணி,
கும்பகோணம் மாநகரம், தஞ்சை வடக்கு மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## நம் வரலாறு

### வழக்கும் சிறையும்...

1958-ஆம் ஆண்டு, ஜனவரி 6, கருப்புக்கொடி காட்டும் போராட்டத்துக்கு, முன்பாகவே கைது செய்யப்பட்ட பேரறிஞர் அண்ணா, ஐந்து நாள்கள் சிறைவாசத்துக்குப் பிறகு 8-ஆம் தேதி விடுதலை செய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர். கோ.செங்குட்டுவன், அ.பொ.அரசு முதலிய 42 பேர் மீது வழக்குத் தொடரப்பட்டது.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.